பழுதடைந்துள்ளன. கீழ்ப்பகுதியிலும், மேல் பகுதியிலும் உள்ள ஓவியங்கள் கண்ணனை குழலூதும் கோபாலனாகவும், அரவின்மீது ஆடும் அம்மானாகவும் சித்தரிக்கின்றன. இவை சுமார் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

செங்கம் பகுதியில் பல்லவர் காலக் கல்வெட்டுகள்

* 122 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், செங்கம் பகுதியில் பல்லவர் காலக் கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். வட ஆற்காடு மாவட்டம் செங்கம் வட்டத்தில் தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறையால் 12 புதிய கல்வெட்டுக்கள் படியெடுத்து வரப்பெற்றன. இவற்றில் 6 பல்லவர் காலத்தையும் 1 முற்கால சோழர் காலத்தையும் சார்ந்தவை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we learn from newspapers that a lot of inscriptions were discovered in the Chingleput district during the last few months and these inscriptions throw great light on the history of South India. So, may I know whether the Hon. Minister will instruct the Archaeological Department to publish details about these inscriptions in newspapers for the use of the people who are interested in South Indian history?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஆராய்ச்சி மூலம் பல இடங்களில் கல்வெட்டுக்களை ஆராய்ந்து, செய்திகளை செய்தித் தாள்களின் மூலமாகப் பரப்பி வருகிறார்கள். அப்படிக் கிடைக் கின்ற குறிப்புக்களை அடிப்படையாக வைத்து தென்னிந்திய வர லாற்றைத் தொகுப்பதற்குப் பயன்படும். குறிப்பாக செங்கத்தில் கிடைத்த 12 கல்வெட்டுக்களில் ஒரு கல்வெட்டில் முக்கியமான பண் டைய வரலாறு ஒன்று பொதிந்திருக்கிறது. அதாவது மகேந்திரவர் மன் 30 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்றுதான் பழைய வரலாறு கள் கூறுகின்றன. ஆனால் கிடைக்கப்பெற்ற கல்வெட்டில் மகேந் திரவர்மன் 59-வது ஆண்டுக்காலம் பற்றிய புதிய குறிப்பு கிடைத் திருக்கிறது. ஆகவே அவன் 60 ஆண்டுக்காலம் வாழ்ந்திருப்பான் என்று தெரிகிறது. அவனுடைய தந்தை சிம்மவிஷ்ணுவைப்பற்றி இதுவரையில் ஒரு குறிப்பும் கிடைக்காமல் இருந்தது. செங்கத்தில் அந்தக் குறிப்பும் கிடைத்திருக்கிறது. மேலும் முதல் பராந்தகன் வரலாறு பற்றிய கல்வெட்டும் கிடைத்திருக்கிறது. மேலும் பல கல்வெட்டுக்களில் பழைய கால போர்க்களக் காட்சிகளும், போர்க் களங்களில் போர் தளபதிகள் போரிட்ட காட்சிகளும், அவர் களுடைய தனித் தன்மையும், அவர்கள் மாண்ட தன்மையும்,

1972 சனவரி 29]

அவர்களுடைய அருமை பெருமைகளும் கிடைக்கப்பெற்றன. இவையெல்லாம் தென்னிந்திய வரலாறு எழுதுவதற்கு மிகவும் பயன்படும் என்ற காரணத்தால், தொல்பொருள் ஆராய்ச்சித் துறையில் இதில் மிக்க கவனம் செலுத்தி வருகிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்

* 123 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போதுள்ள ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வளர்ச்சி வட்டாரங்களின் எல்லைகளை மீண்டும் வரையறுத்தல் பற்றிய பிரச்சினையை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளலாமா என்பது பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பரப்பளவில் பெரியதாக இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவர் கூட்டத்திற்கு வர வேண்டுமென்றால் முப்பது மைல்கள் கடந்து வர வேண்டியிருக்கிறது. ஆகவே, இதை இரண்டாகப் பிரிக்க அரசிடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1958-59-ல் ஊராட்சி ஒன்றியங்கள் பிரித்த நேரத்தில் மக்கள் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டன. மொத்தம் 375-ல் ஒரு ஊராட்சி ஒன்றியம் தகராறில் இருக்கிற காரணத்தால் 374 ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது செயல்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்தில் பல ஊராட்சி மன்றங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதால் சில சங்கடங்கள் வருகின்றன. அரசாங்கத்தின் நிர்வாகச் செலவும் அதிகமாகும். இவற்றையெல்லாம் அரசு ஆராய்ந்தாக வேண்டும். அப்படி இரண்டாகப் பிரிப்பதனால் நிர்வாகத்தை சீராக்க முடியுமா? அதனால் மக்களுக்கு நன்மை விளையுமா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். சில ஊராட்சி ஒன்றியங்கள் நீண்டு வளைந்து இருக்கின்றன. பரப்பளவு பெரியதாகவும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள் எல்லா இடங்களிலும் சீராக நடைபெற முடியாமல் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். ஊராட்சி மன்றக் கூட்டத்திற்கு வருவதற்கு காலதாமதமாகிறது என்று குறிப்பிட்டார். பிரிப்பதனால் சில சங்கடங்கள் வரக்கூடும். பிரிக்காதிருக்கும் நிலையில் தான் தலைவராக வர முடியும், பிரித்தால் தான் தலைவராக வரமுடியாது என்று சிலர் நினைக்கக்கூடும்.